முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1309

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.04.2023, ஞாயிற்றுக்கிழமை

1. அன்னதான வள்ளலே ஞானதேசிகா
அறம்காத்து வருகின்ற குருஅரங்கா
எண்ணமெல்லாம் உலகோர்க்கு நீ கலந்தினிதே
எவ்வுயிர்க்கும் துன்பம்தரா வாழ்வை வாழ
2. வாழவே அருளுகின்ற குரு அரங்கனே
அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
காலமதில் ஞான அறிவுரை ஆசி
கண்டுரைப்பேன் சோபகிருது தகர் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 17ம் நாள், 30.04.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. தன்னிலே அரங்கன் தவத்தால் மாற்றம்
தரணிக்கு லாபமாக அமையக்கூடும்
அண்ணல் தருகின்ற உபதேசம்
அனைவருக்கும் வேதமாக இறங்கக்கூடும்
4. கூடுகின்ற இந்தவித அற்புதங்கள்
குவலயத்தை அலங்கரித்து மிகுதியாகி
மிகுதியாக எங்கும் பரவிவர
மேலான நிலையடைய உலகோரெல்லாம்
5. தகுதிமிக்க அரங்கன் பிரணவக்குடிலை
தக்கபடி அனுகி தீட்சை ஏற்று
ஏற்றுமே அரங்கன் திருவடி பற்றி
எல்லாம் உன் செயலென முழுசரணாகதி
6. ஆற்றல்பட கொண்டு உலகோர் வர
அகிலத்தில் ஞானவான்கள் நிறைந்த ஆட்சி
ஆட்சியதும் ஞான ஆட்சியாக மாற்றம் கொள்ளும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–